1982 ஏப்ரல் 3]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடியைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்

(அ) காவேரி நதி நீர் பிரச்சினை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் காலையிலே 11-00 மணிக்கு டெல்லியிலே மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. கேதார் பாண்டே தலைமையிலே நீண்ட நெடுநாட்களாகத் தீர்மானிக்கப்படாமல் இருக்கிற காவேரி நதி நீர் பிரச்னை சம்பந்தமாக.............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது காலை 10.19 மணிதான் ஆகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தென் மாநில முதலமைச்சர்கள் கலந்து கொள்கின்ற மாநாடு டெல்லியிலே கூடுவதாக செய்தி வந்திருக்கிறது. ஆனால், தமிழகத்தின் சார்பிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளவில்லையென்றும் அவருக்கு முக்கியமான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைப் பணிகள் இருக்கின்ற காரணத்தினாலே கலந்து கொள்ளவில்லையென்றும் இன்றைக்குக் காலையிலே பத்திரிகையிலே செய்திகள் வந்திருக்கின்றன.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகைச் செய்தியை வைத்துப் பேசிக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, உங்கள் மூலமாக நான் இந்த அரசாங்கத்திடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு அந்த மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கலந்து கொள்ள இயலாவிட்டாலும் வேறு அமைச்சர், தலைமைச் செயலாளர் கலந்து கொண்டிருக்கலாம்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1982 ஏப்ரல் 3

இதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போகின்ற காரணத்தினால் தமிழகத்தின் எதிர்காலம் பாதிக்கப்படக் கூடிய அளவிற்கு இருக்கின்ற காரணத்தினாலும், அரசுத் தரப்பிலே ஏன் கலந்து கொள்ளவில்லை என்ற விளக்கத்தை உங்கள் மூலமாக அரசிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது முக்கியம் வாய்ந்த பிரச்னைகள் குறித்து எதிர் வரிசையில் முன வரிசையிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் கேட்கலாம் என்று நாம் ஏற்கனவே தீர்மானித்திருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு சித்தன் அவாகள் இந்தப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இருந்தாலும் அவர்கள் முன் வரிசையில் இல்லையே என்று நாம் அதைப் புறக்கணித்துவிடக் கூடாது. (குறுக்கீடு) அதாவது, எழுப்புவது எப்படி நியாயம் என்பதற்காகச் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் அல்ல.

இன்றைய தினம் காவேரி சம்பந்தமாக டெல்லியில் பேச்சு வார்த்தைகள் நடைபெறுவதாக இருந்தது. நாமும் கலந்து கொள்வதாக இருந்தோம். காவேரிப் பிரச்னை விரைவில் தீர்க்கப்பட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கை. பல்வேறு அரசியல் கட்சிகளும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் வற்புறுத்தி வருவதும் அதுவே ஆகும். ஆனால் இன்று ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் எந்த உடன் பாட்டிற்கும் வரக்கூடிய நிலையில் கேரள அரசிலே ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை இல்லை.

அதோடு மட்டுமல்லாமல் மாநிலச் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரண்டு மாநிலங்களிலேயும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சான்றாக, நம்முடைய சட்டமன்றக் கூட்டத்திலேயே எந்த நேரத்தில் வாக்கெடுப்பு கேட்பார்கள் எதிர்க் கட்சியினர் என்பதே தெரியாத வண்ணம் திடீரென்றுகூட இந்த வாக்கெடுப்புகள் எல்லாம் கேட்கக்கூடிய நிகழ்ச்சிகள் நடைபெறுவதை அண்மையிலே நாம் பார்த்திருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில் சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது இன்றைக்குப் பதில் நாளை வைத்துக் கொள்ளலாமா, ஏனென்றால் நாளைய தினம் ஞாயிற்றுக்கிழமையாக இருக்கிறது என்று நம்முடைய அரசின் சார்பிலே கேட்கப்பட்டது. கர்நாடக அரசுக்கும்—அவர்களுக்கும் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகையினாலே இரு சட்டமன்றக் கூட்டத்தொடர்களும் முடிவுற்ற பிறகு, ஒரு நாளைக் குறிப்பிட்டு அதிலே இந்தப் பேச்சுவார்த்தைகளை வைத்துக் கொள்ளலாம் என்ற வகையிலே இப்பொழுது அது தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.

1982 ஏப்ரல் 3]

டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்த பதிலில் கேரளத்தில் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அரசு இல்லாத சூழ்நிலையில் இப்பொழுது இந்த மாநாட்டில் கலந்து கொள்வது அவ்வளவு நல்லதல்ல என்ற கருத்தை அறிவித்தார்கள். அப்படியானால் அடுத்த காவேரி பிரச்னை பற்றிய கூட்டம் கேரளத்திலே அரசு உருவாகி-மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு உருவாகிற வரையிலே காத்திருக்கப் போகிறதா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இங்கே ஓட்டெடுப்பு திடீரென்று வந்து விடுகிற காரணத்தால் என்று சொன்னார்கள். முதலமைச்சரவர்களே கொண்டு வந்த ஒரு சட்ட முன்வடிவிற்கு ஓட்டெடுப்பு வந்தபொழுது முதலமைச்சரவர்களே, இந்த அவையிலே முந்தாநாள் இல்லை என்று நான் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கர்நாடகத்திலேயும் இங்கும் சட்டசபை நடப்பதாகச் சொன்னார்கள். ஆனால் பத்திரிகையில் கர்நாடக முதலமைச்சர் டெல்லியிலேதான் இதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள், மற்ற அமைச்சர்கள் ஏன் போகக் கூடாது என்றும் கேட்டார்கள். ஆகவே வாக்கெடுப்பு என்றால் முதலமைச்சர் மட்டுமல்ல, மற்ற அமைச்சர்களும் இங்கே இருக்க வேண்டியிருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

ஆளுநர் ஆட்சி கேரளத்திலே இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டதற்குக் காரணம் 1976 ஆம் ஆண்டு தமிழகத்திலே ஆளுநர் ஆட்சி இருக்கும் பொழுது மத்திய அரசு ஒருவகையான உடன்பாட்டைக் கொண்டுவந்ததாகத் தெரிவித்த கருத்தை நாம் மறுக்கின்ற அடிப்படையே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு இல்லாதபொழுது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று நாம் எதை வைத்துக் கூறுகிறோமோ அதே காரணம் நமக்குத் திருப்பிக்கூடச் சொல்லப்படும். அந்த அடிப்படையிலே இதை நாம் கவனிக்க வேண்டி இருக்கிறது என்ற வகையில் குறிப்பிட்டேன்.

(ஆ) காங்கிரஸ் கட்சியின் உபதலைவர்

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவ கனே, இந்த அவை சம்பந்தப்பட்ட பிரச்சினை. அதிலே உங்களுடைய கைட்லைன்ஸ் தேவை. மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஆனால் வந்து இங்கே முன்வரிசையில்